# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
# JAFFNA HINDU COLLEGE

| 40 | T | I |
|---|---|---|

## முதலாந் தவணைப் பரீட்சை - 2019
## 1st Term Examination - 2019

| | |
|---|---|
| கர்நாடக சங்கீதம்<br>Carnatic Music | |
| நேரம்<br>Time | 3 மணித்தியாலம்<br>மேலதிக வாசிப்பு<br>நேரம் 10 நிமிடம் |
| தரம்<br>Grade | 11 |
| பகுதி<br>Part | I, II |

### பகுதி I

❖ **மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து எழுதுக.**

1) வைதீக கானத்தைச் சேர்ந்த உருப்படி.
   1. கீதம் 2. கீர்த்தனை 3. வர்ணம் 4. பதம்

2) உற்றுமை சேர்வது ..... தேவாரம் அமைந்த பண், இராகம்.
   1. இந்தளம், மாயாமாளவ கௌளை 2. செந்துருத்தி, மத்திய மாவதி
   3. பழம் பஞ்சுரமம், சங்கராபரணம் 4. நட்டபாடை, கம்பீர நாட்டை

3) அந்நிய ஸ்வரத்திற்குரிய குறியீடு
   1. * 2. ∿∿ 3. || 4. ⁄

4) பிலஹரி இராகத்தில் வரும் அந்நிய ஸ்வரம்.
   1. கைசிகி நிஷாதம் 2. காகலி நிஷாதம்
   3. சுத்த தைவதம் 4. சதுஸ்ருதி தைவதம்

5) அலங்காரம் ஒன்றினை 2ம் காலத்தில் பாடும் போது எடுத்துக் கொள்ளும் ஆவர்த்தனங்களின் எண்ணிக்கை.
   1. 10 2. 2 ½ 3. 5 4. 7

6) கமாகரீ ஸரிகமதா நிபதமாரி என்ற ஸ்வரத் தொகுதியின் மொத்த அட்சர எண்ணிக்கை?
   1. 16 2. 17 3. 18 4. 19

7) முல்லைப் பண் என அழைக்கப்படுவது,
   1. மோகனம் 2. சங்காரபரணம் 3. தோடி 4. மத்தியமாவதி

8) மத்தியஸ்தாயி நிஷாதத்திற்கு சஞ்சாரமில்லாத இராகத்திறக்கு உதாரணம்.
   1. குறிஞ்சி 2. நவரோஜ் 3. பிலஹரி 4. நாதநாமக்கிரிய

9) ஸரிமபநிஸ - ஸ்நிபமரிஸ என்ற ஆரோகண அவரோகணத்தை உடைய ராகம்.
   1. மோகனம் 2. ஹம்சத்வனி 3. மத்தியமாவதி 4. ஆரபி

10) நாயகன், நாயகி பாவம் கொண்ட உருப்படி.
   1. வர்ணம் 2. பதம் 3. கீர்த்தனை 4. தில்லானா

11) உரையாடல்களுக்கிடையே பாடல்களை பாடி நடத்தும் நிகழ்வு.
   1. இசை நாடகம் 2. நாட்டார் பாடல் 3. வில்லுப் பாட்டு 4. நாட்டிய நாடகம்

12) எல்லா ஸ்வரங்களும் கோமளமாக வரும் இராகம்.
   1. சங்கராபரணம் 2. தோடி 3. கல்யாணி 4. பந்துவராளி



kalvi.lk

13) சங்கீத அளவு கோல் என சிறப்பிக்கப்படும் வாத்தியம்.
1. வீணை 2. வயலின் 3. மிருதங்கம் 4. தம்புரா

14) நன்கு சுருதி சேர்க்கப்பட்ட தம்புராவில் ஒலிக்கும் ஸ்வரங்கள்.
1. சதுஸ்ருதி ரிஷபம், அந்தர காந்தாரம் 2. சுத்த ரிஷபம், அந்தர காந்தாரம்
3. சதுஸ்ருதி ரிஷபம், சதுஸ்ருதி தைவதம் 4. சாதாரண காந்தாரம், சுத்த மத்திமம்

15) திரையிசைப் பாடல்களை இயற்றி இசையமைப்பதன் மூலம் கர்நாடக இசையினை பாமரர் வரை கொண்டு சென்ற சிறப்புக்குரியவர்?
1. முத்துத் தாண்டவர் 2. புரந்தர தாசர்
3. பாபநாசம் சிவன் 4. கோபால கிருஷ்ண பாரதியார்

16) வீணை வாத்தியத்தின் வாசிப்புத் தந்திகள் முறையே,
1. ஸாரணி, பஞ்சமம், மந்தரம், அனுமந்தரம்
2. பஞ்சமம், ஸாரணி, அனுசாரணி, மந்தரம்.
3. பக்கவாரணி, பக்கபஞ்சமம், ஹெக்கஸாரணி, அனுமந்தரம்.
4. அனுமந்தரம், மந்தரம், ஸாரணி, பஞ்சமம்.

17) 7ம் 8ம் நூற்றாண்டு எவ்விதம் சிறப்பித்து அழைப்பர்?
1. பல்லவர் ஆட்சிக் காலம் 2. சோழர் ஆட்சிக் காலம்
3. சங்கிலியன் ஆட்சிக் காலம் 4. பாண்டியன் ஆட்சிக் காலம்

18) சிறந்த நாதயோகி.
1. முத்துத்தாண்டவர் 2. தியாகராஜசுவாமிகள் 3. புரந்தரதாஸர் 4. பாபநாசம் சிவன்

19) சுத்தாங்கமாகப் பாடப்படும் பாடல் வகை.
1. தேவாரம் 2. திருப்புகழ் 3. திருவிசைப்பா 4. கீதம்

20) மட்டிய தாள அலங்காரத்திற்கு பின்னர் ஓர் லகுவைச் சேர்த்தால் வரும் தாளம்.
1. துருவம் 2. அட 3. திரிபுடை 4. ஜம்பை

21) வாசுதேவ நாமாவளி என்ற நூலை இயற்றியவர்?
1. பாபநாசம் சிவன் 2. முத்துத் தாண்டவர் 3. புரந்தரதாஸர் 4. தியாகராஜசுவாமிகள்

22) $|_3$ $|_5$ 00 எனும் அடையாளம் குறிப்பது.
1. மிஸ்ரஜாதி அடதாளம் 2. கண்ட ஜாதி அடதாளம்
3. சதுஸ்ரஜாதி அடதாளம் 4. சங்கீர்ண ஜாதி அடதாளம்

23) அப்பியாசகானத்திற்கும் சபாகானத்திற்கும் பொதுவான உருப்படி
1. கீதம் 2. கீர்த்தனை 3. வர்ணம் 4. தில்லானா

24) தகதிமி என்ற சொற்கட்டை உடைய நடை.
1. திஸ்ர 2. சதுஸ்ர 3. கண்ட 4. மிஸ்ர

25) அதிகாலையில் ஆலயங்களில் பாடப்படும் பாடல்.
1. கந்தபுராணம் 2. கதாகாலட் சேபம் 3. புராண படலம் 4. திருப்பள்ளியெழுச்சி

26) நாடுகுளிர மழைபெய்து வறட்சி நீக்க விளையாடப்படும் பாடல் வகை.
1. கொப்புமுறி 2. கோலாட்டம் 3. கும்மி 4. ஊஞ்சல்

27) விளம்பித லயம் எனப்படுவது,
1. மத்தியகாலம் 2. துரிதகாலம் 3. 2ம் காலம் 4. 1ம் காலம்

28) ஸமகமபதநிஸ் - ஸ்நிதபமகரிஸ என்ற ஆரோகண, அவரோகணத்தை உடைய இராகத்தின் இராகப்பிரிவு?
1. வக்ரம் 2. வஜ்ரம் 3. ஜனகம் 4. பாஷாங்கம்



kalvi.lk

29) சபாகானத்தில் இடம்பெறும் உருப்படிகளின் தொகுதி.
1. ஸ்வர வரிசை, ஜண்டை வரிசை, மேல்ஸ்தாயி வரிசை, தாட்டு வரிசை.
2. ஜதீஸ்வரம், ஸ்வரஜதி, வர்ணம், கீதம்.
3. வர்ணம், கீர்த்தனை, பதம், தில்லானா.
4. அலங்காரம், ராகமாலிகை, வர்ணம், ஸ்வரஜதி.

கீழே தரப்பட்டுள்ள ஸ்வரசாகித்தியத்தை அடிப்படையாகக் கொண்டு 30 – 34 வரையான வினாக்களுக்கு விடை தருக.

| | | | |
|---|---|---|---|
| $|_4$ | 0 | 0 | |
| மா கரி \| | கம \| | பா | \|\| |
| வா சர | வண | னே | |

30) மேலே கொடுக்கப்பட்டுள் உருப்படி.
1. ஜதீஸ்வரம்	2. இலட்சணகீதம்	3. சஞ்சாரிகீதம்	4. அலங்காரம்

31) இவ்வுருப்படி அமைந்த தாளத்தின் அட்சர எண்ணிக்கை.
1. 9	2. 4	3. 8	4. 6

32) இவ்வுருப்படி இயற்றியவர்.
1. பொன் ஸ்ரீ வாமதேவன்	2. தஞ்சை கே. பொன்னையாப்பிள்ளை
3. பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர்	4. T. V பிச்சையப்பா

33) இப்பாடலில் வரும் காலங்கள்.
1. 2ம், 3ம் காலம்	2. 1ம், 2ம் காலம்	3. 3ம், 1ம் காலம்	4. 2ம், 4ம் காலம்

34) இப்பாடல் அமைந்த இராகத்தின் ஆரோகண, அவரோகணம்.
1. ஸரிகமபதநிஸ் - ஸ்நிதபமகரிஸ	2. ஸரிமபதஸ் - ஸ்தபமரிஸ
3. ஸரிகபதஸ் - ஸ்தபகரிஸ	4. ஸரிமபநிஸ் - ஸ்நிதபமகரிஸ

35) தமிழ்ப்பதங்கள் எக் கடவுள் மேல் பாடப்படுகின்றது.
1. பிள்ளையார்	2. முருகன்	3. கிருஷ்ணர்	4. சிவன்

36) சப்த தாளங்களை விளக்குவதற்காக ஏற்பட்ட வரிசை.
1. ஜண்டை வரிசைகள் 2. மேல்ஸ் தாயி	3. அலங்காரம்	4. ஸ்வரவரிசைகள்.

37) ஒன்பதாவது ஸ்வரஸ்தானம்.
1. சுத்தரிஷபம்	2. சுத்தமத்திமம்	3. பஞ்சமம்	4. சுத்ததைவதம்

38) அசல ஸ்வரங்களாவன.
1. ரிகமதநி	2. கமதநி	3. ஸப	4. ஸரிகம

39) திருவிசைப்பா பாடப்படும் இராகம்.
1. மோகனம்	2. மத்திய மாவதி	3. சங்கராபரணம்	4. ஆனந்த பைரவி

40) திருப்புகழின் முத்திரைப் பதம்.
1. முருகா	2. சரணம்	3. பெருமாளே	4. தந்தனதானா

(40 x 1 = 40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1) 1. ஸ்ருதி சேர்க்கப் பயன்படும் ஸ்வரங்களைக் குறிப்பிடுக. (1 புள்ளி)
   2. ஆட வர்ணம் எனப்படுவது யாது? (1 புள்ளி)
   3. சங்கராபரண இராகத்தின் தமிழிசைப் பெயரினைத் தருக. (1 புள்ளி)
   4. திருவாசகம் பாட உகந்த இராகம் எது? (1 புள்ளி)
   5. "ஆதி குரு" என சிறப்பிக்கப்படுபவர் யார்? (1 புள்ளி)
   6. ஸ்வரத்தின் மறுபெயர் யாது? (1 புள்ளி)
   7. ஆரம்பம் முதல் முடிவு வரை தொடர்ச்சியாகப் பாடப்படும் உருப்படி எது? (1 புள்ளி)
   8. ஆரோகணம் அவரோகணம் இரண்டும் வக்ரமாக அமைந்த இராகம் எவ்விதம் அழைக்கப்படும்? (1 புள்ளி)
   9. வில்லுப் பாட்டு நிகழ்ச்சியில் பயன்படுத்தப்படும் பக்க வாத்தியங்கள் 2 தருக. (2 புள்ளி)
   10. மகேந்திர வர்மன் பெற்ற விருதுகள் 2 தருக. (2 புள்ளி)

2) பின்வரும் இராகங்களுள் ஒரு இராகத்திற்கு விரிவான இலட்சணம் எழுதுக.
   (இலட்சணம், சஞ்சாரம், உருப்படி உட்பட)
   1. தோடி 2. மோகனம் 3. சங்கராபரணம்

3) 1. "மாணிக்க வாசகர் பேறெனக்குத் தரவல்லாயோ அறியேன்" எனப்பாடி முடித்த வாக்கேயகாரர் யார்? (2 புள்ளி)
   2. இவரது பதங்கள் எவ்விதம் அமைந்துள்ளன, இதனை எவ்வாறு சிறப்பித்துக் கூறப்படுகின்றது? (2 புள்ளி)
   3. இவரது வாழ்க்கை வரலாற்றினையும் இசைத்தொண்டினையும் விபரித்து எழுதுக. (6 புள்ளி)

4) 1. பக்தி இலக்கியங்கள் எழுந்த காலப்பகுதி யாது? (2 புள்ளி)
   2. இக் காலப்பகுதியை விரிவாக விளக்கி எழுதுக. (10 புள்ளி)

5) 1. ஜனக இராகத்தின் மறுபெயர்கள் 4 தருக. (2 புள்ளி)
   2. ஜன்னிய இராகம் என்றால் என்ன? (1 புள்ளி)
   3. ஜன்னிய இராகப் பிரிவுகளைக் குறிப்பிடுக. (3 புள்ளி)
   4. ஜன்னிய இராகப் பிரிவில் இரண்டிற்கு உதாரணம் தந்து விளக்கி எழுதுக. (6 புள்ளி)

6) 1. அப்பியாசகான வரிசைகள் 4 தருக.
   2. கண்ட ஜாதி அலங்காரம் அமைந்த ராகம், தாளம், இயற்றியவர், அங்கம், அட்சர எண்ணிக்கை, மேளஎண், ஆரோகணம், அவரோகணம் என்பவற்றைத் தருக.
   3. இவ் அலங்காரத்தினை அங்க அடையாளங்களுடன் வரிக்கிரமமாக எழுதுக.
   (2+4+6=12 புள்ளி)

7) 1. லங்கர் என்ற பாகத்தை கொண்டமைந்த வாத்தியம் எது?
   2. இவ்வாத்தியத்தின் அமைப்பினையும் சுருதி சேர்க்கும் முறையினனையும் தெளிவாக விளக்குக.
   3. இவ்வாத்தியத்தை வாசித்து பிரபல்யமான இருவரின் பெயர்களைத் தருக.
   (2+8+2=12 புள்ளி)



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp 075 287 1457